FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணை பரீட்சை - 2021
Conducted by Field Work Centre, Thondaimanaru
6th Term Examination - 2021

நாடகமும் அரங்கியலும் - I
Drama & Theater - I

Three Hours
Gr. 13 (2020)

58 | T | I

## பகுதி – I

➢ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும், சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

01. 'மனிதத் திறனானது உணர்வை, வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் செயற்படுகின்ற முறைமையே கலை' எனக்கூறியவர்.
1) எரிக் நியூட்டன் 2) ஹெகல் 3) ஹொனிக்மன் 4) குரோசே 5) அரவிந்தர்
(…….)

02. பின்வரும் கலை பற்றிய கோட்பாடுகளில், மேலைத்தேயக் கோட்பாடாக அமையாதது,
1) கலைகளுக்கு அடிப்படை போலச் செய்தல்
2) புலக்காட்சிப் பொருளே கலை
3) கலை: முனைப்பு பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடு
4) தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை
5) கலை மனித இறைவழி முறை அனுபவத்தைக் காட்டுகின்றது. (…….)

03. பின்வரும் கலை வடிவங்களில் 'மனதிலேயே கற்பனை செய்து' இரசிக்கின்ற கலை வடிவம்.
1) இசை 2) இலக்கியம் 3) சினிமா 4) நடனம் 5) நாடகம் (…….)

04. அரங்கொன்றில் பார்ப்போரின் இரசனையின் உடனடி வெளிப்பாடாக அமைவது.
1) விமர்சனங்கள் 2) விவரணங்கள் 3) பதிற்குறிகள் 4) சனத்த ிரள் 5) பாராட்டுக்கள்
(…….)

05. இசை நாடகங்களில் இசையானது.
1) பின்னணியாக தொழிற்படும் 2) உணர்வை வெளிப்படுத்தும்
3) ஆடல்களுக்கு உதவும் 4) பிரதான மூலகமாக தொழிற்படும்
5) செயல்களுக்கு உதவும். (…….)

06. 'பீக்கிங் ஒப்பேரா' நாடக மரபின் பிறப்பிடம்
1) ஜப்பான் 2) திபெத் 3) இத்தாலி 4) சீனா 5) இந்தியா
(…….)

07. பின்வரும் நாடகம் பற்றிய கூற்றுக்களில் அடியார்க்கு நல்லாரின் கூற்று.
1) நாடகம் வாழ்வின் ஒரு துண்டம்
2) கதை தழுவி வரும் கூத்து
3) உலக நடைமுறைகளைப் போலச் செய்வது
4) யாதேனும் ஒரு செயலைப் போலச்செய்தல்
5) வாழும் சூழலால் வரும் ஆற்றுகை முறையின் தொகுப்பு (…….)

08. பின்வருவனவற்றில் 'கதை சொல்லும் கலைகளாக' இருப்பவை.

1) இசை, நடனம் 2) வில்லிசை, கதாபிரசங்கம்
3) சிற்பம், ஓவியம் 4) நாடகம், நடனம்
5) பேச்சு, விவரணம் (…….)

09. அரங்கின் ஆக்கக்கூறுகளில், இலக்கியத்துடன் தொடர்புபடுவது?

1) நடிப்பு 2) நாடக எழுத்துரு 3) இசை
4) சாட்சி விதானிப்பு 5) ஒப்பனை (…….)

10. கிரேக்க நாடகங்களுடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களை கருதுக.

அ. தெய்வங்களுக்கும் மனிதர்களுக்குமான முரணை கூறுவது
ஆ. அக்கால அரசியல் நிலமைகளை கிண்டல் செய்வது
இ. துன்ப வாழ்வை துணிவோடு ஏற்கவேண்டும் என்ற பக்குவத்தினை வலியுறுத்துவது.
ஈ. துன்பம் பயங்கரம் என்பவற்றை அடித்தள உணர்வாகக் கொண்டது.
உ. கற்பனை அழகும் மொழி வளமும் நிறைந்தது.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் 'ரஜடி' பற்றிய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி.

1) அ, ஆ, இ 2) அ, இ, உ 3) அ, இ, ஈ
4) ஆ, இ, உ 5) ஆ, ஈ, உ (…….)

11. கிரேக்க ரஜடியில் 'கோரஸ்' பிரதிநிதித்துவம் செய்வது.

1) நடிகரை 2) சமூகத்தை 3) பாத்திரங்களை
4) தெய்வங்களை 5) நாடகத் தயாரிப்பாளரை (…….)

12. கிரேக்க அரங்கில் நடிகர்களின் எண்ணிக்கையை 1 இல் இருந்து 3 வரை அதிகரித்தவர்கள் முறையே,

1) தெஸ்பிஸ், சோபோகிளிஸ், ஏஸ்கலஸ் 2) ஏஸ்கிலஸ், சோபோகிளிஸ், யூரிப்பிடிஸ்
2) தெஸ்பீஸ், ஏஸ்கலஸ், அரிஸ்ரோபென்ஸ் 4) அரியோன், தெஸ்பிஸ், ஏஸ்கிலஸ்
5) தெஸ்பீஸ், ஏஸ்கலஸ், சோபோகிளிஸ் (…….)

13. ஐரோப்பிய நாடக வரலாற்றில் கிடைக்கப்பெற்ற எழுத்துருக்களில் மிகவும் பழைமையான நாடக எழுத்துருவாகக் கருதப்படுவது.

1) பேர்சியன்ஸ் 2) அன்ரிக்கனி 3) சப்பிளையன் வுமன்
4) இடிப்பஸ் றெக்ஸ் 5) அகமெம்னன் (…….)

14. கிரேக்க ரஜடி நாடகங்களில் பெரும்பாலும் மரணச் சம்பவங்கள்

1) போலச் செய்து காட்டப்படும் 2) செய்தியாளனால் சொல்லப்படும்
2) பாயிரத்தால் இசைக்கப்படும் 4) நேரடியாக நிகழ்த்தப்படும்
5) கோரசினால் கூறப்படும் (…….)

15. மேல் வருவனவற்றுள் நாடகத் தயாரிப்புடன் தொடர்புடைய கூற்று அல்லாதது,

1) எழுத்துருவை உயிரோட்டமான கலையாக மேடையில் படைத்தல்
2) நாடகத் தயாரிப்பு தொடர்பான அடிப்படைப் பொறுப்பை வகித்தல்
3) நிதி தொடர்பான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருத்தல்.
4) விளம்பரம் செய்தல், நெறியாளரை தெரிவுசெய்தல் போன்ற பணிகள்
5) நாடக ஆற்றுகை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்கமைத்தல். (…….)

16. நாடகக் கட்டமைப்பில் 'கதைப்பின்னலை' முக்கியமானதாக குறிப்பிட்டவர்.
1) பரதர் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) அரிஸ்ரோட்டில்
4) தனஞ்சயர் 5) சூரியநாராயண சாஸ்திரி (…….)

17. கிரேக்க அரங்கில் ஆடுகளம் எவ்வாறு அழைக்கப்படுகிறது.
1) பலிப்பீடம் (Alter) 2) ஸ்கெனே (Skenea) 3) ஓர்கஸ்ரா (Orchestra)
4) எக்கிக்கிளேமா (Ekky klema) 5) பெரிக்ரோய் (Periactoi) (…….)

18. நாட்டிய சாஸ்திரத்தில் 'சகிர்தையர்' என அழைக்கப்படுபவர்
1) நடிகர்கள் 2) பார்ப்போர்கள் 3) பிராமணர்கள்
4) நடனப் பெண்கள் 5) போர் வீரர்கள் (…….)

19. ஐரோப்பாவில் 'பிரச்சனைகளின் நாடக ஆசிரியர்கள்' என வர்ணிக்கப்பட்டவர்கள்.
1) அகஸ்தோ போவால், இப்ஸன் 2) சோபோகிளிஸ், செனேக்கா
3) பிரக்ட், பீற்றர் புறூக் 4) ஷேக்ஸ்பியர், யூரிப்பிடீஸ்
5) மெனான்டர், இப்ஸன் (…….)

20. நாடகம் என்பது 'அசைவுகளின் தொகுதி' எனக் கூறியவர்.
1) மரிஸ்பெயாட் 2) மேயஹோல்ட் 3) நெல்சன் குட்மன்
4) செக்னர் 5) பாதல் சர்க்கார் (…….)

21. உலக யுத்தங்களின் பின்னர் ஐரோப்பிய அரங்குகளில் தோற்றம் பெற்ற பரிசோதனை அரங்காகக் கொள்ளமுடியாதது.
1) அபத்தவாத அரங்கு 2) காவிய அரங்கு 3) யதார்த்த அரங்கு
4) குரூர அரங்க 5) வறுமை அரங்கு (…….)

22. 'கொமேடியா டெல் ஆர்த்தே' என்னும் நாடக வகை தோற்றம் பெற்றது.
1) கிரேக்கத்தில் 2) இத்தாலியில் 3) உரோமில்
4) பிரான்சில் 5) யப்பானில் (…….)

23. பின்வருவோரில் யதார்த்த வாதத்துடன் தொடர்பற்றவர்.
1) ஸ்ரனிஸ்லவஸ்கி 2) எமிலிசோலா 3) இப்ஸன்
4) அலைக்சாண்டர் டுமாக்ஸ் 5) அன்ரன் செகோவ் (…….)

24. ஐரோப்பிய நவீன அரங்கு தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
அ. மனித இருப்பின் சாரத்தை குறியீடுகளால் சித்திரித்தது.
ஆ. வாழ்வை உள்ளதை உள்ளவாறு சித்திரித்தது.
இ. நன்கமைந்த நாடக கட்டமைப்பை பேணியது.
ஈ. படச்சட்ட அரங்கின் எல்லைகளை உடைத்தது.
உ. எடுத்துரைப்பு முறையை பயன்படுத்தியது.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் யதார்த்த விரோத அரங்குடன் தொடர்புடைய கூற்றுக்கள்.
1) அ, இ, உ 2) அ, ஈ, உ 3) ஆ, ஈ, உ 4) இ, ஈ, உ 5) அ, ஆ, உ
(…….)

25. பின்வரும் கூற்றுக்களுள் 'நாட்டிய தர்மி' பற்றிய சரியான கூற்று.
1) போலித்தன்மை அற்றது. 2) உலக இயற்கையைப் பின்பற்றுவது
3) லலித அங்க அசைவைக் கொண்டது 4) நடைமுறை வாழ்வியலை ஒத்து இருப்பது
5) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது. (…….)

26. வடமொழி நாடகத்தின், நாடக கட்டமைப்பை ஆதரித்து வளர்த்துச் செல்லும் சந்திகளில் 'செயலின் வளர்ச்சியை' இலக்காக கொண்ட சந்தி.
    1) முக சந்தி 2) கர்ப்ப சந்தி 3) நிர்வஹன சந்தி
    4) விமர்சக சந்தி 5) பிரதிமுக சந்தி (…….)

27. நாட்டிய சாஸ்திரம் கூறுகின்ற அரங்கில், நடிகர்கள் ஆற்றுகைக்கு தயாராக தரித்து நிற்கும் இடம்.
    1) ரங்கபீடம் 2) ரங்க சீர்யம் 3) நேபத்ய கிரகம்
    4) பலிப்பீடம் 5) அம்பலம் (…….)

28. தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை.
    1) ஐந்து 2) நான்கு 3) ஒன்பது 4) எட்டு 5) பன்னிரெண்டு
    (…….)

29. 'ஸ்வப்ன வாசவதத்த' என்ற நாடகத்தை எழுதிய வடமொழி நாடக ஆசிரியர்.
    1) ஸ்ரீஹர்சர் 2) சூத்ரகர் 3) பாசர் 4) காளிதாசர் 5) அஷ்வகோசர்
    (…….)

30. மேடை நாடகமொன்றில் பாத்திரமேற்கும் நடிகனின் நடிப்புச் செயற்பாட்டை பார்ப்போர்கள்,
    1) உண்மையென்று நம்பி இரசிக்கின்றனர்.
    2) உண்மையொன்று நம்பியும், நம்பாலும் இரசிக்கின்றனர்.
    3) உண்மையல்ல என்று தெரிந்து இரசிக்கின்றனர்.
    4) நம்புவதுமில்லை இரசிப்பதுமில்லை.
    5) உண்மையென்று முழுமையாக நம்பி ஒன்றிக்கின்றனர். (…….)

31. "புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பே சடங்கு" எனக் கூறியவர்.
    1) ஜோர்ஜ் தொம்சன் 2) பக்தவத்சல பாரதி 3) கா.சிவத்தம்பி
    4) எரிக் நியூட்டன் 5) சி. மௌனகுரு (…….)

32. நவீன அரங்கச் செயற்பாடுகளுக்கு 'சடங்கு அரங்க' நுட்பங்களை பிரயோகிக்காதவர்.
    1) பெற்றோல்ட் பிரக்ட் 2) குரொட்டோவ்ஸ்கி 3) அன்ரோனியோ ஆர்த்தோ
    4) பீற்றர் புறூக் 5) அகஸ்தோபோவால் (…….)

33. 'கூத்தாட்டு அவைக்களம்' என அரங்க வெளியை குறிப்பிடும் இலக்கியம்.
    1) திருக்குறள் 2) தொல்காப்பியம் 3) சிலப்பதிகாரம் 4) கலித்தொகை 5) கூத்த நூல்
    (…….)

34. தமிழ்நாட்டின் நாடக வரலாறு பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    அ. மன்னர்களை மகிழ்வித்தல்
    ஆ. அடிநிலை மக்களின் வாழ்வைப் பிரதிபலித்தல்
    இ. ஆலயம் பூசைகளை சிறப்பித்தல்
    ஈ. மன்னர்களின் வரலாற்றை கூறுதல்
    உ. விடுதலை உணர்வை முதன்மைப்படுத்துதல்.

    மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் 'கோவில் பண்பாட்டுக்கால' அரங்கின் இயல்புகளை சித்திரிக்கும் கூற்றுக்கள்.
    1) அ, இ, உ 2) அ, ஆ, இ 3) ஆ, இ, உ 4) அ, ஈ, உ 5) அ, இ, ஈ
    (…….)

35. பின்வரும் வடமோடிக் கூத்துக்களில், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் நிகழ்த்தப்படும் கூத்துக்கள்.

1) அனுவுத்திரன் நாடகம், நொண்டி நாடகம்
2) இராம நாடகம், தர்மபுத்திரன் நாடகம்
3) இராவணேசன் நாடகம், நொண்டி நாடகம்
4) 18ம் நாட்போர், கர்ணன் போர்
5) அலங்காரரூபன் நாடகம், நொண்டி நாடகம் (…….)


36. இசைநாடகங்களில் பயன்படுத்தப்படும் இராகங்களில் 'கோப உணர்வை' வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான இராகமாக குறிப்பிடத்தக்கது.

1) முகாரி இராகம் 2) தன்னியாசி இராகம் 3) பூபாள இராகம்
4) மோகன இராகம் 5) நீலாம்பரி இராகம் (…….)

37. மஹாகவியின் 'கோடை' நாடகத்தினை முதன்முதலாக நெறியாள்கை செய்தவர்.

1) நா.சுந்தரலிங்கம் 2) அ.தாசீசியஸ் 3) மஹாகவி உருத்திரமூர்த்தி
4) இளைய பத்மநாதன் 5) அ.பாலேந்திரா (…….)


38. அருகிலுள்ள படத்தில் காணப்படும் ஆற்றுகை.



1) எலிசபெத் காலத்துக்குரியது
2) 20ஆம் நூற்றாண்டுக்குரிய
3) மத்திய காலத்துக்குரியது.
4) மறுமலர்ச்சிக் காலத்துக்குரியது
5) உலக யுத்தங்களுக்கு பின்னானது

(…….)

39. படத்தில் காட்டப்பெற்ற அரங்கியவியலாளர் உருவாக்கிய அரங்கமுறை.



1) காவிய அரங்கு
2) குருர அரங்கு
3) அபத்த அரங்கு
4) வறுமை அரங்கு
5) சூழல் அரங்கு

(…….)

40. அருகிலுள்ள நாடகக் காட்சி இடம்பெறும் நாடகம்.



1) மனமே
2) சாகுந்தலம்
3) கோடை
4) லியர்மன்னன்
5) இராவணேசன்

(…….)

(1x4=40 புள்ளிகள்)

## பகுதி II

➢ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

### உப பகுதி – A

01. i) 'நாடகம்' 'அரங்கு' ஆகிய எண்ணக் கருக்களை விளக்கி தொடர்புபடுத்துக?

ii) அரங்கின் இயங்குதலில் 'பல கலை ஆற்றல்கள்' சங்கமிப்பதனை உமது அரங்க அனுபவத்தினூடாக விபரிக்குக.

iii) நாடக உருவாக்கத்தில் 'நெறியாக்க' படிமுறையின் அவசியத்தை விபரிக்குக.

(5x3=15 புள்ளிகள்)

02. i) 'அரங்க கோட்பாடு' என்ற எண்ணக் கருவை விளக்குக.

ii) 'அரங்க கோட்பாடுகளின்' உருவாகத்தில் செல்வாக்குச் செலுத்தும் புறக்காரணிகளை விபரிக்குக.

iii) 'நடிகன் கதாபாத்திரத்திற்குள் நுழைதல்' என்ற செயற்பாட்டின் படிமுறையை உமது நடிப்பு அனுபவத்தில் இருந்து தருக?

(5x3=15 புள்ளிகள்)

03. அரங்க வெளிகளின் வடிவங்களுக்குள் இருக்கின்ற பண்பாடுசார் தொடர்பினை பின்வரும் அரங்க வெளிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i) வட்டக்களரி

ii) குளோப் அரங்கு

iii) படச்சட்ட அரங்கு

(5x3=15 புள்ளிகள்)

### உபபகுதி B

04. அரங்கின் வளர்ச்சியில் 'தொழில்நுட்பத்தின்', சாதக, பாதக விளைவுகளை அரங்க வரலாற்றுப்போக்கின் உதாரணங்களுடன் விளக்குக.

*05.* இலங்கையின் தமிழ்க் கூத்தரங்கில் ஏற்பட்ட மாற்றங்களையும், அம்மாற்றங்களுக்கான புறக்காரணிகளையும் விளக்குக?

*06.* பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

*1)* கதாசிஸ்

*2)* 'அந்தியமாதல்' கோட்பாடு

*3)* மறைபொருள் நாடகங்கள்

*4)* வேலன் வெறியாட்டு

*5)* வாசகப்பா

(5x3=15 புள்ளிகள்)

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணை பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2021

FWC

நாடகமும் அரங்கியலும் - II
**Drama & Theater - II**

Three Hours | Gr. 13 (2020) | 58 | T | II

### பகுதி – I

➢ **இப்பகுதியில் *1* தொடக்கம் *40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும், பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01. கைவினையில் இருந்து கலையை வேறுபடுத்தும் அடிப்படையான விடயம்.
(1) அழகை வெளிப்படுத்துவது
(2) மீள்படைப்பு செய்ய முடியாமல் இருப்பது
(3) மனிதனின் திறனால் உருவாக்கம் பெறுவது
(4) மனித கற்பனையுடன் தொடர்புபடுவது
(5) பிறிதொரு பொருளை மூலப்பொருளாக பயன்படுத்துதல். (…….)

02. நாடக இலக்கணங்களைப் பேசுகின்ற இரண்டு சமஸ்கிருத நூல்கள்.
(1) தசரூபகம், நாட்டிய சாஸ்திரம்
(2) தொல்காப்பியம், கூத்தநூல்
(3) கவிதை இயல், நாட்டிய சாஸ்திரம்
(4) நாடகவியல், கவிதை இயல்
(5) நாட்டிய சாஸ்திரம், வாஸ்து சாஸ்திரம் (…….)

03. பின்வரும் ஆற்றுகை வடிவங்களில் உடல்மொழியில் அதிகம் தங்கியிருக்கும் நாடக வகை.
(1) இசை நாடகம் (1) ஒப்பேரா (3) பலே
(4) கூத்து (5) நாடகம் (…….)

04. ‘காவிய பாணி’ (EPIC) நாடக முறைமையை தோற்றுவித்தவர்.
(1) பிரகட் (2) ஸ்ரனிஸ்வங்கி (3) மேயர் ஹோல்ட்
(4) ஏர்வின் பிஸ்காட்டர் (5) அன்ரோ அன்ரோயின் (…….)

05. ‘30 செக்கனில் மூச்சு’ என்ற நாடகத்தை எழுதியவர்.
(1) சாமுவேல் பெக்கட் (2) அகஸ்தோபோல் (3) பிரக்ட்
(4) இயூஜின் அயனெஸ்கோ (5) பீற்றர் புறூக் (…….)

06. பின்வருவோரில் நவவேட்கைவாத நாடக ஆசிரியராக கொள்ள முடியாதவர்.
(1) அல்பிரட் ஜெரி (2) அன்ரோனின் ஆர்த்தோ (3) குறொட்டோவ்ஸ்கி
(4) றிச்சாட் செக்னர் (5) பெற்றோல்ட் பிரக்ட் (…….)

07. பின்வருவனவற்றில் கலையரசு சொர்ணலிங்கம் ஏற்படுத்திய மாற்றமாகக் கொள்ளமுடியாதது.
(1) உரையாடல் முறைமைக்கு முக்கியத்துவம் அளித்தமை
(2) சமூகப் பிரச்சினைகள் பேசிய நாடகங்களை மேடையேற்றியமை
(3) இயல்பான நடிப்பு முறையை அறிமுகம் செய்தமை
(4) காட்சி அமைப்பில் 'ப்ரோக்பாணி' சித்திர முறையை கையாண்டமை
(5) கல்வி கற்றவர்களை நடிகர்களாக பயன்படுத்தியமை (…….)

08. ஈழத்தில் எழுந்த பின்வரும் நாடகங்களில் 'வர்க்க முரண்பாடுகளை' சித்திரித்த நாடகங்கள்.
(1) காலம் சிவக்கிறது கடூழியம்
(2) சங்காரம், பொறுத்ததுபோதும்
(3) விழிப்பு, அபசுரம்
(4) கோபுரவாசல், கந்தன் கருணை
(5) மானிடமென்பது புல்லோ, காலங்கள் அழிவதில்லை. (…….)

09. பேராசிரியர் சு.வித்தியானந்தன் கூத்துமரபையும், உரைநடை நாடக மரபையும், பரீட்சார்த்தமாக இணைத்து உருவாக்கிய நாடகம்.
(1) இராவணேசன்
(2) நொண்டி நாடகம்
(3) கர்ணன்போர்
(4) வாலிவதை
(5) அலங்கார ரூபன் (…….)

10. இலங்கைத் தமிழரங்கில் பால்நிலை சமத்துவம் பற்றிப் பேசிய 'சரிபாதி', 'மாதொரு பாகம்', 'கூர்' போன்ற நாடகங்களின் ஆசிரியர்கள் முறையே.
(1) குழந்தை ம.சண்முகலிங்கம், சி.மௌனகுரு, அ.தாசீசியஸ்
(2) கோகிலா மகேந்திரன், சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம்
(3) சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம், ஞா.ஜெயரஞ்சனி
(4) கார்த்திகா கணேசர், குழந்தை ம.சண்முகலிங்கம், கோகிலா மகேந்திரன்
(5) சி. மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம், கோகிலா மகேந்திரன் (…….)

11. ஈழத்தின் முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுவது.
(1) திருவிழா
(2) மண்சுமந்த மேனியர்
(3) மாயமான்
(4) விடுதலைக்காளி
(5) கசிப்பு (…….)

12. ஈழத்தில் 1960கள், 1970கள், 1990களில் தோற்றம் பெற்ற அரங்க நிறுவனங்கள் முறையே.
(1) திருமறைக் கலாமன்றம், நடிகர் ஒன்றியம், அரங்கச் செயற்பாட்டுக்குழு
(2) நடிகர் ஒன்றியம், நாடக அரங்க கல்லூரி, திருமறைக் கலாமன்றம்
(3) நாடக அரங்க கல்லூரி , நடிகர் ஒன்றியம், அரங்க செயற்பாட்டுக்குழு
(4) நடிகர் ஒன்றியம், நாடக அரங்க கல்லூரி, அரங்க ஆய்வுகூடம்
(5) திருமறைக் கலாமன்றம், நாடக அரங்க கல்லூரி, அரங்க செயற்பாட்டுக் குழு. (…….)

13. சாகுந்தலம் நாடகத்தில் வருகின்ற "வனத்தில் வசிக்கும் எனக்கே நேசத்தால் இவ்வித மனத்தளர்ச்சி ஏற்படுமாயின் மகளை முதலில் பிரியும் இல்லறத்தார் வருந்துவது எவ்விதமோ…" எனக்கூறும் கதாபாத்திரம்.
(1) கௌதமி
(2) சகுந்தலை
(3) பிரியம் வதை
(4) காசிபர்
(5) அனுசூயை (…….)

14. யப்பானிய அரங்கில் 'கனாமிச்சி' என்னும் பூம்பாதை பயன்படுத்தப்படுவது.
(1) 'நோ' அரங்கில்
(2) கபுகி அரங்கில்
(3) புன்றக் அரங்கில்
(4) கியோஜென் அரங்கில்
(5) ஒப்பேரா அரங்கில் (…….)

15. ஐரோப்பிய நாடகவியலாளராலேயே புகழப்பெற்ற சீன நடிகர்
(1) மிங்குவாங் (2) யுவான் (3) கியான்லோங்
(4) மீ லாங் பாங் (5) காவோ யுக் வாங் (…….)

16. இலங்கையில் முதன்முதலில் தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்பட்ட பல்கலைக்கழகம்.
(1) யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (2) கட்டுப்பெத்த வளாகம்
(3) கொழும்பு பல்கலைக்கழகம் (4) பேராதனை பல்கலைக்கழகம்
(5) மட்டக்களப்பு பல்கலைக்கழகம் (…….)

- **இராவணேசன் நாடகத்தில்வரும் பின்வரும் பாடலை அடிப்படையாக கொண்டு 17, 18, 19 ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்குக.**

"முன்னவன் நீயோ வந்துன் தம்பிக்கு எதிராய் நின்றாய்
என்னை நீ பணிந்து வாழ்ந்தால் இரக்காது வாழ்வாய் சொன்னேன்"

17. இப்பாடலை உரைக்கும் பாத்திரம்
(1) இராமன் (2) இராவணன் (3) அங்கதன்
(4) இந்திரஜித்தன் (5) அனுமன் (…….)

18. இப்பாடலில் குறிப்பிடப்படும் 'தம்பி' என்ற பாத்திரம்
(1) வாலி (2) இந்திரஜித்தன் (3) அனுமன்
(4) கும்பகர்ணன் (5) விபீடணன் (…….)

19. இப்பாடலில் குறிப்பிடப்படும் முன்னவன்
(1) இராவணன் (2) கும்பகர்ணன் (3) அங்கதன்
(4) இராமன் (5) விபீடணன் (…….)

20. கிறிஸ்தவ கூத்துக்களால் அறிமுகமாகிய புதியபாத்திரம்
(1) உரைஞர் (2) கட்டியகாரன் (3) புலசந்தோர்
(4) தலையாரி (5) கப்பித்தான் (…….)

21. சிங்கள மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள 'நாடகம' என்ற வடிவம் எங்கிருந்து அங்கு சென்றதாக ஆய்வுகள் கூறுகின்றன.
(1) மட்டக்களப்பு பிரதேசம் (2) யாழ்ப்பாண பிரதேசம் (3) மன்னார் பிரதேசம்
(4) வன்னிப் பிரதேசம் (5) கேரளா பிரதேசம் (…….)

22. கீழைத்தேச அரங்கியல் உத்திகளை தமது நவீன நாடகங்களில் பயன்படுத்திய ஐரோப்பிய நெறியாளர்கள்.
(1) இப்ஸன் - அன்ரோ அன்ரோயின் (2) ஷேக்ஸ்பியர் - மெனிங்சன் பிரபு
(3) பிரக்ட் - பீற்றர் புறூக் (4) ஸ்ரனிஸ்லவஸ்கி – மேயர்ஹோல்ட்
(5) குறொட்டோவ்ஸ்கி – யூலியன் பெக் (…….)

23. தமிழ்நாட்டு நவீன நாடக மரபில் தாக்கம் செலுத்திய ஈழத்து நாடகவியலாளர்.
(1) பேரா.இராமானுஜம் (2) சி.மௌனகுரு (3) இளைய பத்மநாதன்
(4) அ.மங்கை (5) குழந்தை ம.சண்முகலிங்கம் (…….)

24. 'மூன்றாவது அரங்கு' என்ற பெயரில் தனது நவீன நாடக செயற்பாடுகளை முன்னெடுத்தவர்.
(1) மு.இராமசாமி (2) அண்ணாத்துரை (3) கிரிஷ்கர்னாட்
(4) வெளி ரெங்கராஜன் (5) பாதல்சர்க்கார் (…….)

25. ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து, நாடுகளில் தொடர்ச்சியாக நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள்.
   (1) க.பாலேந்திரா – அ.தாசீசியஸ்   (2) கந்தவனம் - அ.மங்கை
   (3) அப்துல்கமீட் - சந்திரசேகரன்   (4) மாவை நித்தியானந்தன் - அம்பி
   (5) ஞானம் லட்பேட் - அன்ரனி ஜீவா   (…….)

26. ஈடிப்பஸ் நாடகத்தில் இடிப்பஸ், இறுதியில் மரணத்தை தெரிந்தெடுக்காது கண்களைக் குத்திக் கொண்டதன் காரணம்.
   (1) உயிர் வாழ விரும்பியமை
   (2) தன் பாவத்திற்கு தண்டனை பெறவிரும்பியமை
   (3) இறந்து மரணத்தின்பின் தந்தை, தாயை காணவிரும்பாமை
   (4) குருடனாக சிறிது காலம் வாழவிரும்பியமை
   (5) மரணத்தில் இருந்த பயத்தினால்   (…….)

27. பின்வரும் கிரேக்க நாடகங்களில் 'இடிப்பஸ்' கதையுடன் தொடர்புடைய நாடகங்கள்.
   (1) அகமெம்னன், அன்ரிக்கனி
   (2) மீடியா - அன்ரிக்கனி
   (3) அஜாக்ஸ் - ரோஜன்வுமன்
   (4) எலெக்ரா – த.சோபோறி
   (5) கொலனசில் இடிப்பஸ், அன்ரிக்கனி   (…….)

28. மகாகவியின் கோடை நாடகத்தினை முதன்முதலாக தயாரித்து மேடையேற்றிய நிறுவனம்.
   (1) நாடக அரங்க கல்லூரி   (2) நடிகர் ஒன்றியம்   (3) திருமறைக் கலாமன்றம்
   (4) நாடோடிகள் குழு   (5) கூத்தாடிகள் குழு   (…….)

29. சிங்கள மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுகின்ற "ஏழு மலட்டு இராணிகளின்" ஐதீகத்துடன் தொடர்புடைய சடங்கு.
   (1) தொவில்   (2) ஹொகம்ப ஹங்காரிய   (3) சன்னியக்கும
   (4) சூனியம் சடங்கு   (5) ரட்டயக்கும   (…….)

30. சிங்கள மக்களின் 'கோலம்' நாடக மரபில் பயன்படுத்தப்படும் "தானயம்பல்" என்ற அரங்க வெளியானது.
   (1) சுற்றிவர பார்ப்போர் அமரும் அரங்கவெளி
   (2) மூன்று பக்கமும் பார்ப்போர் அமரும் அரங்கவெளி
   (3) ஒரு பக்கம் பார்ப்போரைக் கொண்ட அரங்கவெளி
   (4) பல இடங்களிலும் ஆற்றுகை நடைபெறும் நகரும்வெளி
   (5) உயர்த்தப்பட்ட படச்சட்ட அரங்கவெளி   (…….)

31. திரிகோணம் (Tricon) என்ற அமைப்பினூடாக, இனநல்லுறவை வலுப்படுத்தும், நாடகங்களை மேடையேற்றிவரும் சிங்கள நாடக நெறியாளர்.
   (1) தர்மசிறி பண்டார நாயக்கா   (2) பராக்கிரம நிரியல்ல   (3) சோமலதா சுபசிங்க
   (4) சுகதபால டி சில்வா   (5) ஜெரோம் டி சில்வா

32. "சங்கீதம் ஒன்று சகல உலகிற்கும்! வெள்ளையர்கள் என்றால் மிருகங்கள் அல்லவே" கோடை நாடகத்தில் வருகின்ற இச்சொல்லாடலுக்குரிய பாத்திரம்.
   (1) பஞ்சையர்   (2) மாணிக்கம்   (3) சோமு   (4) செல்லம்   (5) விதானை

33. 'ஈழத்து தமிழ் அரங்கில் பெண்' என்னும் நூலின் ஆசிரியர்.
(1) கோகிலா மகேந்திரன் (2) கா. சிவத்தம்பி (3) பா.ஆனந்தராணி
(4) ஞா.ஜெயரஞ்சனி (5) காரை செ. சுந்தரம்பிள்ளை (.......)


34. லியர் மன்னன் நாடகத்தில் 'காடில்யா' வை மணம் முடிப்பவன்
(1) ஆல்பனி (2) பிரான்ஸ் இளவரசன் (3) பிரிட்டன் இளவரசன்
(4) கார்ண்வால் (5) எட்கார் (.......)

35. இப்சன் எழுதிய 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தின் மூலக்கதை
(1) நாவல் ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டது
(2) புராணமொன்றில் இருந்து எடுக்கப்பட்டது.
(3) உண்மைக் கதை ஒன்றை அடிப்படையாக கொண்டது
(4) கற்பனை செய்து எழுதப்பட்டது.
(5) நாடகமென்றை தழுவி எழுதப்பட்டது. (.......)

36. அரங்கப் பயிற்ச்சிகளில் வழங்கப்படும் 'கீப்பறிச்' பயிற்சி
(1) உடலுக்கானது (2) மனத்திற்கானது (3) குரலுக்கானது
(4) அசைவுகளுக்கானது (5) உணர்வுகளுக்கானது (.......)

37. ஒரு நாடக உருவாக்கத்தில் எடுத்துச் சொல்லி என்னும் நினைவூட்டினரின் பணி ஆரம்பிப்பது.
(1) வாசிப்பு ஒத்திகையில் (2) இறுதி ஒத்திகையில் (3) செயல் ஒத்திகையில்
(4) மேடையேற்றத்தில் (5) மனன ஒத்திகையில் (.......)

38. படத்தில் காணப்படும் நாடக ஆசிரியரின் புகழ்பெற்றது.




(1) அவல நாடகங்களால்
(2) அபத்த நாடகங்களால்
(3) காவிய பாணி நாடகங்களால்
(4) யதார்த்த நாடகங்களால்
(5) மனோரதிய நாடகங்களால்
(.......)

39. அருகிலுள்ள படத்தில் காணப்படும் ஈழத்து நாடகவியலாளர் உருவாக்கிய நாடகப் பாரம்பரியம்.



(1) சிறுவர் நாடகம்
(2) கவிதை நாடகம்
(3) வார்த்தைகளற்ற நாடகம்
(4) கூத்துருவ நாடகம்
(5) நகைச்சுவை நாடகம்
(.......)

40. அருகிலுள்ள படத்திலுள்ள அரங்க நுட்பம் பயன்படுத்தப்பட்டது,



(1) கிரேக்க நாடக மரபில்
(2) சீன நாடக மரபில்
(3) யப்பானிய நாடக மரபில்
(4) எலிசபெத்கால நாடக மரபில்
(5) இந்திய நாடக மரபில் (.......)

(40x1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

### உப பகுதி A

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

1. i) 'இடிப்பஸ் மன்னன்' 'இராவணேசன்' நாடகங்களின் நாயகர்களான, 'இடிப்பஸ், இராவணன்' ஆகிய பாத்திரங்களின் பண்புகளை எழுதுக. *(5 புள்ளிகள்)*

   ii) அப்பாத்திரப் பண்புகளில் ஒன்று அவர்களை 'அவல முடிவினை நோக்கி வருவித்த விதத்தினை ஒப்பீடு செய்து விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

2. i) 'மானிட நம்பிக்கைகளின் நிச்சயமற்ற, தன்மையை ஷேக்ஸ்பியரின் லியர் மன்னன் நாடகம் வெளிப்படுத்துகின்றது.' என்பார்கள், இக்கூற்று தொடர்பான உமது அபிப்பிராயத்தை விபரிக்குக. *(5 புள்ளிகள்)*

   ii) 'லியர் மன்னன் நாடகத்தின் சமகாலத்துக்குரிய பொருத்தப்பாட்டினை' ஆராய்க. *(10 புள்ளிகள்)*

3. ஆற்றுகைக்கும் பார்ப்போருக்குமிடையிலான ஊடாட்டம் தொடர்பாக பின்வரும் நெறியாளர்கள் கொண்டிருந்த சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் விபரிக்குக.

   i) ஸ்ரனிஸ்லவஸ்கி

   ii) பெற்றோல்ட் பிரக்ட்

   iii) அகஸ்தோ போவால் *(3x5= 15 புள்ளிகள்)*

### உபபகுதி B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

4. மேற்புலத்தில் உலக மகா யுத்தங்களின் விளைவாக தோற்றுவிக்கப்பட்ட சமூக சூழலில், மேற்கிழம்பிய பலவகைமையான அரங்க முயற்சிகளை முன்வைத்து அவற்றின் நோக்கங்களை ஆராய்க.

5. ஈழத்தின் சமகால வாழ்வியலைப் புரிந்து கொண்டு நாடகங்களை ஆக்கிய வகையில் குழந்தை ம.சண்முகலிங்கம் முதன்மைப்படுத்தப்படுகின்றார். அவரின் நாடகங்களின் சமூக முக்கியத்துவங்களை ஆராய்க.

6. மேல்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

   1) சற்றயர்

   2) யப்பானிய நோ

   3) கோலம்

   4) தெருக்கூத்து

   5) காமன் கூத்து *(5x3=15புள்ளிகள்)*